# ஹரோ தமிழ் பாடசாலை திருக்குறள் போட்டி 2026

ஆண்டு - 9 ம் அதற்கு மேற்பட்டவர்களும்(Year – 9 and above )

31/08/2012 ற்கு முன் பிறந்தவர்கள்

(ஹரோ தமிழ் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

**போட்டி நடைபெறும் திகதி 09/05/2026**

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

மாணவர்கள் 9 குறள்களையும் அதற்குரிய 8 பொருள்களையும் கூறவேண்டும்.

அன்பூஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு. (குறள் 74)

பொருள்: அன்பு பிறரிடம் பற்றுள்ளம் கொள்ளச் செய்யும் அந்த உள்ளம், நட்பு எனும் பெருஞ்சிறப்பை உருவாக்கும்.

அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃது இல்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல். (குறள் 170)

பொருள்: பொறாமை கொண்டதால் புகழ் பெற்று உயர்ந்தோரும் இல்லை; பொறாமை இல்லாத காரணத்தால் புகழ் மங்கி வீழ்ந்தோரும் இல்லை.

வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு. (குறள் 595)

பொருள்: தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும் .அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனத்தில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லரும் செய்வர் சிறப்பு. (குறள் 752)

பொருள்: பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர். எது இல்லாவிடினும் பொருள் மட்டும் நிரம்ப உடையவராயின் யாவரும் சிறப்புச் செய்வர்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்ப படும். (குறள் 114)

பொருள்: ஒருவர் நேர்மையானவரா அல்லது நெறி தவறி, நீதி தவறி நடந்தவரா என்பது அவருக்குப் பின் எஞ்சி நிற்கப்போகும் புகழ்ச் சொல்லைக் கொண்டோ அல்லது பழிச் சொல்லைக் கொண்டோதான் நிர்ணயிக்கப்படும்.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை. (குறள் 594)

பொருள்: தளராத ஊக்கம் உடையவனிடம் செல்வம் தானாகவே வழிதேடி வந்து சேரும்.

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (குறள் 619)

பொருள்: ஊழின் காரணத்தால் ஒரு செயல் முடியாமல் போகுமாயினும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியாவது கொடுக்கும்.

**ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்** (குறள் 131)

**பொருள்:-** ஒருவர்க்கு உயர்வு தரக் கூடியது ஒழுக்கம் என்பதால், அந்த ஒழுக்கம் உயிரைவிட மேலானதாகப் போற்றப்படுகிறது

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின் (குறள் 62)

**பொருள்:** பழி இல்லாத நல்ல பண்பு உடைய மக்களைப்பெற்றால் ஒருவனுக்கு ஏழு பிறவியிலும் தீவினைப் பயனாகிய துன்பங்கள் சென்று சேரா.